# தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

## MACOP No. 115/2008

| ம.சா : 1 | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர்: | : | திரு. சகாயராஜ் | தொழில் | : | கொத்தனார் |
| தகப்பனார் பெயர் | : | திரு. செல்வராஜ் | மதம் | : | கிறிஸ்தவர் |
| கிராமம்/தாலுகா | : | கீழமாத்தூர் | வயது | : | 34 |
| மாவட்டம் | | மதுரை | தேதி | : | 27.03.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது.**

நான் இம்மனுவில் மனுதாரர். இம்மனுவில் எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு கையொப்பம் செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவண்களை குறீயீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 21.03.2008 | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ. 1 | நகல் |
| 2 | 26.08.2008 | Discharge summary | ம.சா.ஆ. 2 | நகல் |
| 3 | -- | மனுதாரர் ஆதார் அடையாள அட்டை | ம.சா.ஆ. 3 | நகல் |
| 4 | -- | மனுதாரர் வங்கிக் கணக்கு விபரம் | ம.சா.ஆ. 4 | நகல் |

ம.சா.ஆ. 1 முதல் 4 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2–ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

விபத்து நேரத்தில் TN 22 T 0774 என்ற மாருதி ஆம்னி வாகனத்தில் திருப்பரங்குன்றத்தில் இருந்து கோவை நோக்கி நான் பயணித்துக் கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். என்னுடன் வீரையா, ராஜேந்திரன், சந்தன பிரகாஷ் ஆகியோர் பயணம் செய்து கொண்டு இருந்தனர் என்றால் சரிதான். ரகு என்பவர் வாகனத்தை ஓட்டிக் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். தாராபுரம் அருகே சென்று கொண்டு இருந்த பொழுது Indian Hotel என்ற இடத்தில், அந்த ஓட்டலில் இருந்து வெளியே திடீரென ஒரு பேருந்து வந்தது என்றால் சரிதான். அந்த பேருந்திற்கு பின்புறம் அதே ரோட்டில் வந்த லாரி சாலையின் வலதுபுறம் ஏறி வந்தது என்றாலும், அதில் மோதாமல் இருப்பதற்காக மாருதி ஆம்னி வண்டியை ரோட்டின் இடதுபுறம் திருப்பினார் என்றால் சரிதான். அப்பொழுதான் இடதுபுறம் இருந்த புளிய மரத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநர் திடீரென்று சாலையில் இடதுபுறம் திரும்பியதால், அவருடைய கவனக் குறைவினால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஓட்டுநர் ரகு கவனத்துடன்தான் வண்டியை ஓட்டினார் என்றால் சரிதான். இந்த விபத்து நடந்தது 19.03.2008 என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தது 21.03.2008 என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தப்பட்ட காயச்சான்றிதழை நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

விபத்து நடந்தவுடன் தாராபுரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றேன் என்றாலும், அதற்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். அங்கு முதலுதவி செய்துவிட்டு, மேல் சிகிச்சைக்காக உடனே மதுரை, இராஜாஜி மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தனர். மதுரை, இராஜாஜி மருத்துவமனையில் 19.03.2008 முதல் 17.04.2008 வரை நான் வெளிநோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு இன்றுவரை நான் வேறு எடுத்துக் கொள்ள வில்லை என்றால் சரியல்ல. எனது மாத வருமானம் ரூ.5000/- என்பதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வயது மற்றும் வேலை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் ரகுவிற்கு ஆம்னி வாகனத்தை ஓட்டுவற்குரிய உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆம்னிக்கு பதிவுச்சான்றிதழும் உரிய முறையில் இல்லை என்றால் சரியல்ல. இந்த மனு அடிக்கடி எனது தவறுகைக்காக தள்ளுபடியான சமயத்திற்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அதிப்படியான இழப்பீட்டை கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 27.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.27 15:47:12 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.